**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை**

**முன்னிலை:- திரு. R.M. மாரிமுத்து, பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, தேவகோட்டை.(மு.கூ.பொ)

2024 ஆம் ஆண்டு ஜீன் திங்கள் 13 ஆம் நாள் வியாழக் கிழமை

**E.A. No: 1/2022**

**in**

**E.P. No: 3/2018**

**in**

**O.S. No: 32/2014**

சேதுராமன் ....... மனுதாரர்/மனுதாரர்/வாதி

-எதிர்-

1. சரோஜினி
2. சாந்தி
3. சுப்பிரமணியன் ......எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு கடந்த 13.06.2024 அன்று என் முன்னிலையில் இறுதி விசாரணைக்காக வந்த போது மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.S.வெங்கடபதி அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் யாரும் முன்னிலையாகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டும் இருதரப்பு வாதங்களை கேட்டறிந்து இது நாள் வரை இந்நீதிமன்ற பரிசீலினையிலிருந்த இம்மனுவில் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்..

**உத்தரவு**

மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பில் சி.பி.சி கட்டளை 6 விதி 16 & 17 மற்றும் சி.பி.சி. பிரிவு 153ன் கீழ் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. மனுதாரர்/மனுதாரர்/வாதி மனுவின் சுருக்கம்:**

2(i). தாவாச் சொத்துக்களான ஏழு இலக்கச் சொத்துக்களைப் பொறுத்து ஏற்பட்டுள்ள தீர்ப்பாணையின் அடிப்படையில் ஆவணம் பதிந்து கொடுக்க இந்த நிறைவேற்றுதல் மனுவை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றும், மேற்படி தீர்ப்பாணையில், தாவாச் சொத்துக்களான 1 முதல் 7 லக்கச் சொத்துக்களில் 7வது லக்கச் சொத்து வருவாய் கணக்குகளில் அரசு புறம்போக்கு என்று வருவதால் மேற்படி 7வது லக்கச் சொத்தை நீக்கிவிட்டு ஏனைய 1 முதல் 6 லக்கச் சொத்துக்களைப் பொறுத்து மட்டும் தான் மேற்படி நிறைவேற்றுதல் மனுமூலம் கிரையம் பெற்றுக்கொள்ள சம்மதிக்கிறேன் என்று

கூறப்பட்டுள்ளது.

2(ii). எனவே மேற்படி நிறைவேற்றுதல் மனுவில் (அசல் மனுவில்) சொத்து விபரத்திலுள்ள 7வது லக்கச் சொத்தை நீக்கறவு செய்யவேண்டியது அவசியமாக உள்ளது என்றும், இதில் எதிர்மனுதாரர்களுக்கு யாதொரு நியாயமான ஆட்சேபனைகளும் இருக்கக் கூடியதில்லை என்றும், ஆகையால் மேற்படி நிறைவேற்றுதல் மனுவில் இத்துடன் உள்ள மனுவில் கண்ட 7வது லக்கச் சொத்தை நீக்கறவு செய்ய வேண்டும் என்று கூறப்பட்டுள்ளது.

**3. இம்மனுவை அனுமதிக்க முகாந்திரம் உள்ளதா?**

இரு தரப்பும் கேட்கப்பட்டது. தீர்ப்பாணையில கண்ட 1 முதல் 7 இலக்கச் சொத்துக்களில் 7வது இலக்கச் சொத்து வருவாய் கணக்குகளில் அரசு புறம்போக்கு என்று வருவதால், அதை மனுதாரரே நீக்கச் சொல்லி மனுதாக்கல் செய்திருப்பதால், நீதியின் நலன் கருதியும் மனுதாரரின் பரிகாரத்தை கருத்திற்கொண்டும் இந்த மனுவில் கண்ட 7வது இலக்கச் சொத்தை மட்டும் நீக்கறவு செய்து இம்மனு அனுமதிக்கப்படுகிறது.

**இறுதியாக,** 7வது இலக்கச் சொத்தைப் பொறுத்து நிறைவேற்றுகை மனுவில் நீக்கறவு செய்து இம்மனு அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரடியாக சொல்லப்பட்டு அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் பிழைத் திருத்தம் செய்யப்பட்டு 2024ம் ஆண்டு ஜீன் திங்கள் 13ம் நாளாகிய இன்று திறந்த நீதிமன்றத்தில் உத்தரவு பகரப்பட்டது.

**S/d.R.M.மாரிமுத்து,பி.ஏ.,பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
தேவகோட்டை.

**மனுதாரர்/மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி**
**மற்றும் சான்றாவணம் : இல்லை**

**எதிர்மனுதாரர்கள்/எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சிகள்**
**மற்றும் சான்றாவணங்கள்: இல்லை**

**S/d.R.M.மாரிமுத்து,பி.ஏ.,பி.எல்.,**
மாவட்ட உரிமையியல் நீதிபதி (மு.கூ.பொ),
தேவகோட்டை.